# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 28.10.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக இந்த ஜமாஅத்தை உருவாக்கி இதனை முன்னோர்களுடன் இணைத்து ஓர் கண்ணியத்தை வழங்கியிருக்கின்றான். இது ஒரு சாதாரண கண்ணியமில்லை. இது ஒரு சாதாரண ஜமாஅத் இல்லை. நல்லியல்பு கொண்ட பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் இந்தக் காலத்தை அடைய வேண்டும் என்ற ஆசையுடன் மரணம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே தம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்துடன் சேர்ந்திருப்பதாகக் கூறும் நம்மில் ஒவ்வொருவரும், நமது முன்னோர்கள் எவ்வாறு செயல்பட்டார்களோ அதனை சிந்திக்க வேண்டும். அவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். அன்னாரின் ஜமாஅத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் தர்பிய்யத்தின் விளைவாக அல்லாஹ்வுடன் எவ்வாறான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் அவர்கள் சம்பந்தமாக இறைவன் கூறுகிறான்:

**மய் யஷ்ரீ நஃப்ஸஹுப் திகாஅ மர்ழாத்தில்லாஹ்** – அதாவது அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தமது உயிரையே விற்றுவிடுபவர்கள் ஆவர். எனவே அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் கட்டளையைப் பின்பற்றினார்கள். தமது உயிரையே அவனது வழியில் விற்றார்கள். இதற்காக அவர்கள் எவ்வித கவலையும் கொண்டதில்லை. அல்லாஹ்வும் அவர்களுக்கு எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கினான். சஹாபாக்கள் திருக்குர்ஆனின் கட்டளையின்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு அவர்களுக்கு அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான ஆர்வம் இருந்ததென்றால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் நாங்கள் எவ்வாறு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்பவர்களாகத் திகழ்ந்தார்கள். ஒரு சிலர் எந்த அளவுக்கு கேட்டார்கள் என்றால், அல்லாஹ் அவர்களுக்கு இறைச்சட்டம் இறங்கும் போது எதனையும் கேட்காதீர்கள் என்று தடுத்து விட்டான். ஏனென்றால் நீங்கள் கேட்கும் கேள்விகள் ஒரு சில நேரங்களில் உங்களை கஷ்டத்திற்கு ஆளாக்கி விடக்கூடும். எனவே அல்லாஹ் தனது அடியார் மீது மிக அதிகமான கருணை காட்டக் கூடியவனாக இருக்கின்றான். கருணையின் பார்வையினை தனது அடியான் மீது வைத்துள்ளான். எந்த அடியான் அவனது திருப்திக்காக அனைத்து கஷ்டங்களையும் சகித்துக் கொள்ளத் தயாராகின்றானோ, அவனது கட்டளையின்படி செயல்படத் தயாராகி விடுகின்றானோ அந்த அடியானை இது கஷ்டத்திலிருந்து பாதுகாக்கின்றது. இறைவனும் அவன்மீது பிரத்தியேகமான தனது அன்பை வெளிப்படுத்துகிறான். பிறகு அல்லாஹ்வுடன் உறுதியான ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்பவர்களும் தனது சுற்றுச்சூழலிலும் கூட இறைவனின் பண்பினைப் பிரதிபலிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அல்லாஹ் இட்ட அனைத்து கட்டளையின்படியும் கீழ்ப்படிந்து நடக்க முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். அல்லாஹ்வின் படைப்பினங்களுடனும் அன்போடு நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளை கொடுப்பார்கள். எனவே அடியானை இறைவனுடன் சேர்த்து வைத்து அதன் பிறகு இறை அடியாருக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளின் பக்கம் கவனம் செலுத்தக்கூடிய இந்த இஸ்லாம்தான் உண்மையான இஸ்லாம் ஆகும். மேலும் இந்த உண்மையான இஸ்லாத்தைத்தான் சஹாபாக்கள் பெற்றுக் கொண்டு அதனை செயல்படுத்தியும் காட்டினார்கள். மேலும் இதைத்தான் ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கற்பித்துத் தருவதற்காக வருகை தந்தார்கள். அதனைப் பற்றிக் கூற வந்துள்ளார்கள். அந்த வழியில் நம்மை நடத்த வந்துள்ளார்கள். எனவே இதற்காக நாம் நம்மை சோதித்துப் பார்ப்பது அவசியமாகும். இப்போது நான் இது சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சில மேற்கோள்களை உங்கள் முன் எடுத்து வைப்பேன். இது நம்மை சோதித்துப் பார்ப்பதன் பக்கமும் நமது நிலைமையின் பக்கமும் கவனம் செலுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

நான் முதன்முதலில் எடுத்துள்ள மேற்கோளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் காலத்தின் சூழ்நிலையினைப் பற்றி எடுத்துரைத்துள்ளார்கள். அன்னாரை ஏற்றுக் கொள்ளாத இந்தக் காலத்திலுள்ள உலமாக்களை நோக்கி இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் பார்க்கிறேன்; தற்போது உலமாக்களின் நிலை இவ்வாறே இருக்கிறது. **லிம தகூலூன மாலா தஃப் அலூன்** – நீங்கள் செய்யாத ஒன்றை ஏன் கூறுகின்றீர்கள்? என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருக்கின்றான். இதுதான் இன்றைய உலமாக்களின் நிலையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்கு பெரும்பாலார் பொருத்தமானதாகவே காணப்படுகின்றனர். மேலும் திருக்குர்ஆனின் மீது வெறும் சொல்லளவில் தான் ஈமான் எஞ்சியுள்ளது. மேலும் இறை கட்டளைக்கு கீழ்ப்படிதலிலிருந்து இம்மக்கள் முற்றிலும் விலகியுள்ளனர். ஹதீஸ்களிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஒரு காலம் வரும். அப்போது திருக்குர்ஆன் வானத்தை நோக்கி எடுக்கப்பட்டு விடும். இதுதான் அந்தக் காலம் என்பதை நான் உறுதியாக அறிவேன். திருக்குர்ஆனின்படி கீழ்படிவதன் மூலம் கிடைக்கும் உண்மையான தூய்மை மற்றும் இறையச்சம் இன்று எங்கே இருக்கிறது? இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை என்றால் இறைவன் இந்த ஜமாஅத்தை ஏன் நிறுவியிருக்கப் போகிறான்? நமது எதிரிகளால் இதனை புரிந்து கொள்ள முடியாது. இறுதியில் அவர்கள் நமது உண்மைத்துவம் வெட்டவெளிச்சமாக நிரூபணமாகும் போது இதனை அறிந்து கொள்வார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் எவ்வாறான ஒரு ஜமாஅத்தை தயார் செய்திருக்கின்றான் என்றால் அது திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இது ஜமாஅத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் மிகப்பெரிய பொறுப்பாகும். இது அவர்கள் ஜமாஅத்தின் மீது வைத்துள்ள எதிர்பார்ப்பாகும். இது திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ளும் ஜமாஅத்தாக இருக்க வேண்டும். இதனை ஏற்றுக் கொள்வதன் பொருள் வெறும் அந்தப் புத்தகத்தை ஏற்றுக் கொள்வது என்பதல்ல. மாறாக அதன் கட்டளைகளின்படி அமல் செய்வதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அனைத்து வகையான கலப்படமும் இதிலிருந்து வெளியேற்றப்படும். நாம் நம்மை சோதித்துப் பார்ப்பது அவசியமாகும். அனைத்து வகையான இந்த உலகத்தின் கலப்படங்கள் இதிலிருந்து வெளியேற்றப்படும். கலப்படமல்லாத தூய கூட்டம் ஒன்று உருவாக்கப்படும். அது இந்த ஜமாஅத்தே ஆகும். எனவே நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால் நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிபவர்களாக ஆகி விடுங்கள். மேலும் கண்ணியத்திற்குரிய சஹாபாக்கள் வெளிப்படுத்திய அந்த மாற்றத்தை உங்களது வாழ்வில் ஏற்படுத்துங்கள். உங்களைக் கண்டு பிறர் தடுமாறும் அளவுக்கு ஆகிவிடக் கூடாது. ஒவ்வொரு அஹ்மதியும் ஓர் முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஆம் நான் இதையும் கூறுகின்றேன். அதாவது இட்டுக்கட்டுவது மற்றும் பொய்யிலிருந்து தூர விலகி விடுங்கள். பாருங்கள். நுபுவ்வத்தின் வழியாக வந்த இந்த இயக்கத்தை இந்த கண்ணோட்டத்தில் பாருங்கள். நுபுவ்வத்தின் வழியில் இந்த இயக்கம் செல்கிறது. அதன் வழியில் மற்றவர்களை வழிநடத்த நாடுகின்ற இந்த இயக்கத்தின் வழியில் செல்லுங்கள். எனக்கு நன்றாகத் தெரியும். எங்கு இறை அருளின் மழை பொழிகின்றதோ அங்கு நன்கு பலன் தரக்கூடிய செடி கொடிகள் வளர்கின்றன. அத்துடன் விஷச்செடிகளும் உருவாகின்றன.

**இது சம்பந்தமாக தவறான வாதம் செய்யக் கூடியவர்களும் தோன்றுவார்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.**

எவ்வாறிருந்த போதிலும் அன்னார் கூறுகின்றார்கள்: இக்காலத்தில் அல்லாஹ்விடம் நல்ல விளைவிற்காக துஆ செய்யுங்கள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக வந்துள்ளார்களோ அது நிறைவேற வேண்டும் என்பதற்காக தொடர்ந்து துஆ செய்யுங்கள். இந்த இயக்கத்தின் அடித்தளமானது தூய குர்ஆனின் வசனங்கள் மற்றும் ஹதீஸினைச் சார்ந்து இருக்கிறது. மேலும் இவ்வியக்கத்தின் உண்மைத்துவத்திற்காக அல்லாஹ் வானம் மற்றும் பூமியின் அடையாளங்களின் ஒரு முத்திரையை வழங்கி இருக்கின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்காக அல்லாஹ் வானம் மற்றும் பூமியின் அடையாளங்களின் ஒரு முத்திரையை வழங்கியிருக்கின்றான். மேலும் அனைத்து மக்களின் மீதும் அன்னாரின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்திய ஆதாரங்களைப் பூர்த்தி செய்யும் விதமாக இந்த முத்திரையினை வழங்கியிருக்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதனை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இறைவன் புறமிருந்து வருபவருக்கு முத்திரை வழங்கப்படுகிறது. அது முஹம்மதின் முத்திரையாகும். இதனை அறிவற்ற எதிரிகள் புரிந்து கொள்ளவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவரொருவர் அல்லாஹ்வின் புறமிருந்து வந்தாலும் அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியே வருவார். மேலும் அன்னாரின் முத்திரையின் கீழ் இருந்தவாறே அவர் பணி செய்வார். ஆனால் மக்கள் அறிவதில்லை. ஆனால் நீங்கள் ஒரு முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். ஏனென்றால் இறைவனுடன் சிறப்பான தொடர்பினை ஏற்படுத்துவதற்காக இந்த ஜமாஅத் உருவாகியுள்ளது என்பதை மக்கள் புரிய வேண்டும். மேலும் கூறுகின்றார்கள்: எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களே! அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக! அந்த வல்லமைமிக்க மற்றும் கருணை நிறைந்த அந்த இறைவன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சஹாபாக்களை எவ்வாறு மறுமை நாளின் பயணத்திற்காக தயார் செய்தானோ அவ்வாறே உங்களையும் தயார் செய்வானாக. நன்றாக நினைவில் கொள்ளுங்கள். உலகம் ஒரு பொருட்டே அல்ல. உலகத்திற்காக மட்டும் இருக்கும் அந்த வாழ்வானது சாபத்திற்குரியதாகும். எவரின் இன்பமும் துன்பமும் உலகத்திற்காக இருக்குமோ அவர் பாக்கியமற்றவர்களாவர். இவ்வாறான ஒருவர் எனது ஜமாஅத்தில் இருக்கிறார் என்றால் அவர் வீணாகவே தம்மை இதில் இணைத்துக் கொள்கிறார். மேலும் அவர் கனிகள் தராத ஒரு காய்ந்த கிளையைப் போன்றவராவார்.

**பிறகு நமது சீர்திருத்தம் மற்றும் உறுதிப்பாட்டிற்கான சரியான வழியைக் காட்டியவாறு அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எனது பார்வையில் தூய்மையாவதற்கு இது மிகச் சிறந்த ஒரு வழியாகும். இதைவிட வேறு சிறந்த வழி இருக்கவே முடியாது. அதாவது மனிதன் எவ்வகையிலும் தற்பெருமை கொள்ளக் கூடாது. அறிவின் மீதும் குடும்பத்தின் மீதும் செல்வத்தின் மீதும் தற்பெருமை கொள்ளக் கூடாது.

இவ்வாறான தற்பெருமை பொதுவாக மனிதன் மத்தியில் காணப்படுகிறது. ஒரு சிலருக்கு அறிவு ரீதியில் தற்பெருமை இருக்கின்றது. ஒரு சிலருக்கு குடும்ப ரீதியில் தற்பெருமை இருக்கின்றது. ஒரு சிலருக்கு பொருளாதார ரீதியில் தற்பெருமை இருக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த வகையிலும் தற்பெருமை கொள்ளக் கூடாது. இறைவன் ஒருவருக்கு கண்களைக் கொடுத்திருக்கின்றான் என்றால், இருளிலிருந்து வெளியேற்றுகின்ற ஒவ்வொரு ஒளியும் வானத்திலிருந்துதான் வருகின்றது என்பதை அவர் கண்டு விடுகின்றார். மேலும் மனிதன் எந்நேரமும் வானத்தின் ஒளியின் தேவையுடையவனாக இருக்கின்றான். வானத்திலிருந்து வரக்கூடிய சூரிய ஒளி வரவில்லை என்றால் கண்களால் எதையும் பார்க்க முடியாது. இவ்வாறே எல்லா இருள்களையும் அப்புறப்படுத்தி அதன் இடத்தில் தக்வா மற்றும் பரிசுத்தத்தை உருவாக்குகின்ற ஒளியும் வானத்திலிருந்தே வருகின்றது. நான் உண்மையாகவே கூறுகின்றேன். மனிதனின் தக்வா, ஈமான், இபாதத், பரிசுத்தம் இவை அனைத்தும் வானத்திலிருந்தே வருகின்றது. இவ்வனைத்தும் இறைவனின் அருள்களைச் சார்ந்தே இருக்கின்றது. அவன் விரும்பினால் ஒருவரை இதில் நிலைத்திருக்கச் செய்கின்றான். விரும்பியவரை இதிலிருந்து நீக்கி விடுகின்றான். இந்த அனைத்து அடையாளங்களும் அல்லாஹ்வின் அருட்களே ஆகும். இதனை விரும்பினால் அல்லாஹ் நிலைத்து வைப்பான். விரும்பினால் இதனை அழித்தும் விடுகிறான். இவ்வாறு இருக்கும் போது தற்பெருமை ஏன் ஏற்படுகிறது? எவருக்கும் தமது தக்வாவின் மீது தற்பெருமை இருக்கக் கூடாது. எவருக்கும் தமது ஈமானின் நிலையிலும், இபாதத்திலும், துஆவிலும் தமது பரிசுத்தத்திலும் தற்பெருமை இருக்கக் கூடாது. இவ்வாறே முன்பு கூறியதுபோன்று உலகம் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் தற்பெருமை கொள்ளக் கூடாது. எல்லா பொருளும் அல்லாஹ்வின் புறமிருந்தே கிடைக்கின்றது. ஆகவே அல்லாஹ்வின் பக்கமே எல்லா நேரமும் குனிந்திருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தனது ஆன்மாவை ஒரு பொருட்டாகவே கருதாமல் இருப்பதுதான் உண்மையான ஞானமாகும். இதற்கு எந்தவொரு மதிப்புமில்லை. மேலும் பணிவுடன் இறை சன்னிதியில் வீழ்ந்து அல்லாஹ்வின் அருளை நாடுங்கள். மேலும் காழ்ப்புணர்ச்சியினை அழிக்கக்கூடிய, உள்ளத்தில் ஓர் ஒளியினை ஓர் ஆற்றலை ஒரு துடிப்பினை உருவாக்கக்கூடிய அந்த ஞானத்தின் ஒளியினை நாடுங்கள். பிறகு அவனது அருளினால் அவனது பங்கு கிடைத்து விட்டால், பிறகு துஆ ஏறறுக் கொள்ளப்படுவதற்கான உள்ளம் திறந்து விட்டால், அல்லாஹ்வின் அருள்கள் வரத்துவங்கினால் இதில் தற்பெருமை கொள்ள வேண்டாம். மாறாக பணிவு மற்றும் தன்னடக்கத்தில் இன்னும் முன்னேற வேண்டும். அல்லாஹ்வின் அருட்களின் கதவு திறப்பதை உணர்ந்தால் பணிவில் இன்னும் அதிகமாக முன்னேற வேண்டும். ஏனென்றால் எந்த அளவுக்கு அவர் தன்னை ஒரு பொருட்டாகவே கருத மாட்டாரோ அதே அளவிலான நிலைமைகளில் ஒளிகள் இறைவன் புறமிருந்து இறங்கும். அது அவனுக்கு ஒளி மற்றும் ஆற்றலை வழங்கும். மனிதன் இந்த கொள்கையின்படி நடந்தால் அவனது நடைமுறைகள் உன்னதமானதாக ஆகி விடும். உலகத்தில் தம்மை ஒரு பொருட்டாகவே கருதுவதும் தற்பெருமையாகும். இதனால் மனிதனுக்கு என்ன நிலைமை ஏற்படுகிறது என்றால், பிறர் மீது சாபமிடுவது மட்டுமின்றி பிறரை ஏளனமாகக் கருதுகிறான். எனவே நான் கூறியது போன்று நம்மில் ஒவ்வொருவரும் சோதித்துப் பார்ப்பது அவசியமாகும்.

நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய அழகிய வழியில் நடக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: பாக்கியமுள்ள மக்களே! நீங்கள் முழு ஆற்றலுடன் உங்களுக்காக வழங்கப்பட்ட போதனையில் நுழைந்து விடுங்கள். இறைவன், ஒருவன் என்றும் அவனுக்கு ஈடிணை இல்லை என்றும் புரிந்து கொள்ளுங்கள். மேலும் வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் எதனையும் அவனுக்கு இணை ஆக்காதீர்கள். இறைவன் காரணிகளை உபயோகிப்பதை விட்டு உங்களை தடுக்கவில்லை. ஆனால் எவர் இறைவனை விட்டுவிட்டு காரணிகளின் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ அவர் முஷ்ரிக் ஆவார். முந்தைய காலத்திலிருந்தே இறைவன் இதையே கூறி வருகின்றான். அதாவது பரிசுத்த உள்ளத்தை அடையாமல் இரட்சிப்பை பெற முடியாது. எனவே தூய உள்ளம் கொண்டவர்களாக ஆகி விடுங்கள். காழ்ப்புணர்ச்சி மற்றும் கோபத்திலிருந்து விலகி விடுங்கள். இந்த காழ்ப்புணர்ச்சி மற்றும் கோபம் மனிதனை அழித்து விடுகிறது. அவனது நல்லொழுக்கத்தை சீரழித்து விடுகிறது.

கூறுகின்றார்கள்: காழ்ப்புணர்ச்சி மற்றும் கோபத்திலிருந்து தவிர்ந்திருங்கள். மனிதனின் நஃப்ஸே அம்மாராவில் பல்வேறு வகையான அசுத்தங்கள் இருக்கின்றன. ஆனால் அனைத்திற்கும் மேலாக தற்பெருமை என்னும் அசுத்தம் இருக்கின்றது. தற்பெருமை அதிக அசுத்தம் மற்றும் மிகப்பெரிய பாவமாகும். தற்பெருமை இல்லையென்றால் எவரும் காஃபிராக ஆகியிருக்கமாட்டார். எனவே நீங்கள் உள்ளத்தால் எளியவராகி விடுங்கள். பொதுவாக மனித குலத்திற்கு அனுதாபத்தை மேற்கொள்பவர்களாக ஆகி விடுங்கள். நீங்களோ அவர்களுக்கு சுவர்க்கத்தை தேடித் தருவதற்கு அறிவுரைகளை கூறுகின்றீர்கள். இப்போது நமது உலமாக்களும் இறை அழைப்பாளர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அறிவுரைகளை வழங்குகின்றார்கள். சிறந்த தொண்டுகளைச் செய்கின்றார்கள். ஆனால் ஒரு சில நேரங்களில் தமது சொந்த விஷயங்கள் வரும்போது அதனை மறந்து விடுகின்றார்கள். தற்பெருமை அவர்களின் முன்னால் வந்து விடுகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் சுவர்க்கத்தைப் பெறுவதற்கான அறிவுரைகளை வழங்குகிறீர்கள். ஆனால் நீங்கள் இந்த ஒரு சில நாட்களைக் கொண்ட இந்த உலகத்தில் நீங்கள் மக்களுக்கு தீங்கிழைக்க நாடினால் உங்களது அந்த அறிவுரை எவ்வாறு சரியாக இருக்க முடியும்? சொந்த விஷயம் வரும் போது மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தீமையை நாடுவது சரியல்ல. இறை கடமைகளை பணிவுடன் பின்பற்றுபவர்கள் அதைக் குறித்து கேள்வி கேட்கப்படுவீர்கள் என்ற உள் அச்சத்துடன் செய்து வாருங்கள். அல்லாஹ் கடமையாக்கிய விஷயம் சம்பந்தமாக கேட்கப்படுவீர்கள். இதனால் உள்ளத்தில் ஓர் அச்சத்தை உருவாக்குங்கள்.

கூறுகின்றார்கள்: தொழுகையில் அதிகமாக துஆ செய்யுங்கள். இதன் மூலம் இறைவன் உங்களை தன் பக்கம் ஈர்க்க வேண்டும். மேலும் உங்களது உள்ளங்களை பரிசுத்தமாக்க வேண்டும். ஏனென்றால் மனிதன் பலவீனமானவனாவான். தூர விலகக்கூடிய ஒவ்வொரு தீமையும் இறைவனின் ஆற்றலினால் தூர விலகிச் செல்கின்றது. எதுவரை மனிதன் இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெறவில்லையோ அதுவரை எந்த தீமையையும் தூர விலக்க முடியாது. சம்பிரதாய அடிப்படையில் நாம் கலிமா சொல்பவர்களாவோம் என்று கூறுவது உண்மை இஸ்லாம் அல்ல. மாறாக இறை சன்னிதியில் உங்களது ஆன்மா வீழ்ந்து விடுவதும், அனைத்து வகையிலும் இறை கட்டளையானது உலகத்தை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று உணர்ந்து கொள்வதும் உண்மையான இஸ்லாம் ஆகும். இன்றைய காலத்தில் ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்த நிலையை உருவாக்க வேண்டும். இதன் மூலம் இறைவனின் அருட்களை அதிகமதிகம் பெறக்கூடியவர்களாக வேண்டும்.

மேலும் கூறுகின்றார்கள்: எனது அன்பான ஜமாஅத்தார்களே! காலம் தமது எல்லையை அடைந்து விட்டது என்பதை உறுதியாக புரிந்து கொள்ளுங்கள். ஒரு மிகப்பெரிய புரட்சி வெளிப்பட்டு விட்டது. எனவே உங்களது உள்ளங்களை ஏமாற்றாதீர்கள். மேலும் மிக விரைவில் நேர்மையில் முழுமை அடைந்து விடுங்கள். இது மிக முக்கியமான விஷயமாகும். உண்மையைக் கடைபிடியுங்கள். அல்லாஹ்வுடன் தொடர்பினை ஏற்படுத்துவதில் உண்மை இருக்க வேண்டும். களங்கமற்ற முறையில் இபாதத்துகள் செய்து வர வேண்டும். ஹுகூகுல் இபாத் –ஐ பேணி வர வேண்டும். அல்லாஹ்வின் இரு முக்கியமான கட்டளை உள்ளன. அவை, ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் ஆகும். இதில் நேர்மை மற்றும் உண்மை இருக்க வேண்டும். ஜமாஅத்தின் தொண்டாக இருந்தாலும், ஒருவருக்கொருவர் தொடர்பாக இருந்தாலும் இதிலும் நேர்மை, உண்மை இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனை உங்களது வழிகாட்டியாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் ஒவ்வொரு விஷயத்திலும் இதிலிருந்து ஒளியினைப் பெறுங்கள். மேலும் ஹதீஸினைக் குப்பையைப் போன்று எரிந்து விடாதீர்கள். இது நன்கு உதவக்கூடியதாக இருக்கிறது. மிகக் கடினமான உழைப்பைக் கொண்டு இந்த பொக்கிஷம் தயார் செய்யப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் ஏதேனும் கருத்திற்கு ஹதீஸில் ஏதேனும் கருத்து முரண்படுகின்றது என்றால் நீங்கள் வழிகேட்டில் வீழ்ந்து விடாமல் இருக்க அவ்வாறான ஹதீஸ்களை விட்டு விடுங்கள். திருக்குர்ஆனை இறைவன் மிகவும் பாதுகாப்போடு உங்கள் வரை கொண்டு சேர்த்திருக்கின்றான். எனவே நீங்கள் இந்த பரிசுத்த வேதத்திற்கு கண்ணியம் வழங்குங்கள். வேறெதனையும் இதனை விட மேன்மையாக கருதாதீர்கள். அனைத்து வாய்மையும், நேர்மையும் இதில்தான் அடங்கியுள்ளது. உண்மை மற்றும் அதன்படி நடத்தல் திருக்குர்ஆனின் போதனையினைச் சார்ந்தே இருக்கிறது. எந்த அளவுக்கு ஒரு நபரின் தக்வா மற்றும் ஞானத்திலும் மக்களுக்கு நம்பிக்கை இருக்குமோ அந்த அளவுக்கே மக்களின் உள்ளத்தில் அவருடைய பேச்சு தாக்கத்தினை உருவாக்குகிறது.

எனவே ஞானம் மற்றும் தக்வா மேன்மை அடையும்போது அல்லாஹ்வின் அருளால் உங்களது பேச்சிற்கும் நல்ல விளைவு உருவாகும்.

**அல்லாஹ்வின் வாக்கின் மீது நம்பிக்கை வைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்:**

எவரின் ஆடை நன்றாக இருக்குமோ அவர் அல்லாஹ்வின் பார்வையில் அன்பானவனாக இருக்கமாட்டார். அவர் பணக்காரராக இருந்தாலும் சரி, மாறாக உலகத்தினை விட மார்க்கத்திற்கு முதன்மை கொடுப்பவரும், முழுமையாக இறைவனுக்காகவே ஆகுபவருமே அவனது அன்பாளராக இருக்கிறார். எனவே நீங்கள் முன்புள்ள விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். உலகத்தை நோக்கி ஓடாதீர்கள். மாறாக, மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் கொடுங்கள். அந்தக் காலத்தில் மக்கள் மத்தியில் தூய மாற்றங்கள் நிலவின.

அன்னார் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தின் தற்போதுள்ள நிலையின் பக்கம் நான் பார்வையிட்டால் எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படும். தற்போது மிகவும் பலவீனமான நிலைமைதான் இருக்கிறது. நாம் கடக்க வேண்டிய பல கட்டங்கள் இன்னும் எஞ்சியுள்ளன. அல்லாஹ் என்னிடம் செய்த வாக்குறுதியின் பக்கம் கவனம் செலுத்தும்போது எனது வருத்தம் நம்பிக்கையாக மாறி விடுகிறது. இவ்வாறே அவனின் வாக்குறுதியில் ஒன்று இதுவும் ஆகும். அவன் கூறுகிறான்: வ ஜாயிலுல்லதீனத் தபஊக ஃபக்கல்லதீன கஃபரூ இலா யவ்மில் கியாமா – உம்மைப் பின்பற்றுபவர்களை நிராகரிப்பவர்களை விட இறுதி நாள் வரை மேலோங்கச் செய்வேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அந்த நேரத்தில் ஒரு வருத்தம் இருந்தது. மேலும் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு கனவமூட்டினார்கள். தற்போது ஒரு காலம்

கழிந்த பிறகு நமக்கு இதை விட அதிகமாக வருத்தம் ஏற்பட வேண்டும். நமது நிலைமைகள் சீர்கெட்டு விடக்கூடாது. எனவே அதிகமாக சிந்திக்க வேண்டும். மிக அதிகமாக சோதித்துப் பார்ப்பது அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்கூறுகின்றார்கள்:**

அவன் என்னைப் பின்பற்றுபவர்களுக்கு என்னை எதிர்ப்பவர்களுக்கு எதிராக வெற்றியை வழங்குவான் என்பது உண்மையே. ஆனால் சிந்திதக்கக்கூடிய விஷயம் என்னவென்றால் பின்பற்றக்கூடியவர்களில் ஒவ்வொருவரும் எனது கையில் பைஅத் செய்ததனால் மட்டுமே எனது ஜமாஅத்தைச் சார்ந்தவராக ஆகி விட முடியாது. எதுவரை கீழ்ப்படிதலின் முழு நிலையினையும் உருவாக்க மாட்டாரோ அதுவரை என்னைப் பின்பற்றுபவர்களைச் சார்ந்திருக்க முடியாது. எதுவரை கீழ்ப்படிதலில் தன்னை மாய்த்துக் கொள்ளும் வகையில் தன்னை முழுமையான முறையில் கீழ்ப்படிதலில் சேர்த்துக் கொள்ளமாட்டாரோ, பின்பற்றமாட்டாரோ அதுவரை கீழ்ப்படிதல் என்ற வார்த்தையானது அவருக்கு பொருந்தாது.

கூறுகின்றார்கள்: எனது ஜமாஅத் என்னைப் பின்பற்றுவதில் தன்னை மாய்த்துக் கொள்கின்றவர்களாக அதாவது முழுமையான முறையில் கீழ்ப்படிபவர்களாக இருப்பார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது. இதன் மூலம் எனக்கு நிம்மதி ஏற்படுகின்றது. மேலும் எனது வருத்தம் நம்பிக்கையாக மாறி விடுகிறது.

மேலும் கூறுகின்றார்கள்: எவ்வாறிருந்தபோதிலும் இறைவனின் வாக்கின் மீது எனது பார்வை இருக்கின்றது. அந்த இறைவன் தான் எனது நிம்மதிக்கு காரணமாக இருக்கிறான். ஜமாஅத் பலவீனமானதாகவும் அதிகமாக தர்பிய்யத் பெற தேவையுடையதாகவும் இருக்கிறது. நீங்கள் இறைவனுடன் ஓர் உண்மையான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவனுக்கே மேன்மை வழங்குங்கள். மேலும் தமக்காக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய ஜமாஅத்தை ஒரு முன்மாதிரியாகப் புரிந்து கொள்ளுங்கள். அவர்களைப் பின்பற்றியே செல்லுங்கள் என்பதன் பக்கம் கவனம் செலுத்துவது மிக அவசியமான ஒரு விஷயமாகும்.

**உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள் என்பதைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். எவரது குறிக்கோள் இந்த உலகமாக இருக்கிறதோ, அவர் இந்த ஜமாஅத்தில் இருக்கிறார் என்றால், அவர் இறைவனின் பார்வையில் இந்த ஜமாஅத்தைச் சேர்ந்தவர் இல்லை. எவர் இந்த உலகத்தை விட்டு அகன்று இருக்கின்றாரோ அவரே அல்லாஹ்வின் பார்வையில் இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவராக இருக்கிறார். இவ்வாறு நினைப்பதால் அழிந்து விடுவேன் என்று எவரும் நினைக்க வேண்டாம். இது இறைவனை அறிந்து கொள்ளும் வழியிலிருந்து தூய விலக்கக்கூடிய நினைப்பாகும். எவர் அவனுக்காக மட்டுமே ஆகி விடுகிறாரோ அவரை எப்போதும் இறைவன் வீணாக்கமாட்டான். மாறாக தானே அவருக்கு பாதுகாவலனாகி விடுகிறான். அல்லாஹ் கருணையாளன் ஆவான். எவரொருவர் அவனது வழியில் எதனை இழக்கின்றாரோ அவரே அதனைப் பெறுகின்றார். எவரொருவர் இறை கட்டளையினை பேணி நடக்கின்றாரோ அவரைத்தான் அல்லாஹ் நேசிக்கின்றான். அவரது சந்ததிகளே அருளுக்குரியதாக இருக்கும் என்று நான் உண்மையாகவே கூறிக் கொள்கிறேன். இறைவனை உண்மையாக பின்பற்றக் கூடியவரும் அவரது சந்ததிகளும் அழிந்து விடுவது என்பது ஆகாத ஒன்றாகும். இவ்வுலகத்தில் இறைவனை விட்டுவிட்டு உலகத்தின் பக்கம் தன்னை சாய்த்துக் கொள்பவர்கள்தான் அழிகின்றார்கள். ஒவ்வொன்றின் ஆணி வேரும் இறைவனின் கையில்தான் உள்ளது என்பது உண்மையில்லையா? இறைவனின்றி யாரும் வெற்றி பெற முடியாது.

எந்த முன்னேற்றமும் அடைய முடியாது. எந்த சுகமும் இன்பமும் கிடைக்காது. செல்வம் இருக்கும். ஆனால் மரணத்திற்குப் பிறகு மனைவி மக்களுக்கு அது பயனளிக்கும் என்று யார் கூற முடியும்? இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் உங்களிடம் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்துங்கள்.

**ஜமாஅத்திற்கு குறிப்பாக அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:**

என்னுடன் தொடர்பு வைத்துள்ள நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். அதாவது ஒருவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி அவருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். ஏனென்றால் இதுதான் திருக்குர்ஆனின் போதனையாகும். வயுத்யிமூனத் தஆம அலா ஹுப்பிஹி மிஸ்கீனன் வயதீமன் வ அஸீரா – அவர்கள் இறைவன் மீது கொண்ட அன்பின் காரணமாக ஏழை, அனாதை, கைதி ஆகியவர்களுக்கு உணவளிக்கின்றனர். வந்த கைதிகளில் பெரும்பாலார் காஃபிர்களாகவே இருந்தனர். இப்போது இஸ்லாத்தின் அனுதாபத்தின் உச்சகட்டம் எவ்வாறானது என்பதை பாருங்கள். எனது பார்வையில் நற்குணங்களின் முழுமையான போதனையானது இஸ்லாத்தைத் தவிர வேறெவருக்கும் இந்த பாக்கியம் கிடைக்கவில்லை.

**இதனைக் கூறிய அதே நேரத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:**

எனது உடல்நிலை நல் ஆரோக்கியத்திற்கு திரும்பிய பிறகு அதாவது அந்த நேரத்தில் அன்னாருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. நான் நன்னடத்தை சம்பந்தமாக ஒரு புத்தகம் எழுதுவேன். எவ்வாறிருந்தபோதிலும் அன்னார் கூறுகின்றார்கள். எனது குறிக்கோள் நிறைவேறிவிட வேண்டும் என்பதுதான் எனது விருப்பமாகும். அது எனது ஜமாஅத்திற்கு ஒரு முழுமையான போதனையாக இருக்க வேண்டும். இப்திகா மர்ழாத்தில்லாஹ் –வின் வழிகள் இதில் தென்பட வேணடும். இன்னாரிடமிருந்து இவ்வாறு நிகழ்ந்து விட்டது. அவ்வாறு செய்து விட்டார் என்று நான் கேட்கும் போது எனக்கு அதிகமாக வருத்தம் ஏற்படும். இதன் மூலம் எனக்கு மகிழ்வு ஒன்றும் ஏற்படவில்லை. இப்போதும் இரண்டடி எழுந்து நான்கடியில் விழக்கூடிய ஒரு குழந்தையைப் போன்றே நான் ஜமாஅத்தைக் காண்கின்றேன். ஆனால் இறைவன் இந்த ஜமாஅத்தினை நிச்சயமாக முழுமைப்படுத்திவிடுவான் என்று நான் நம்புகிறேன். எனவே நீங்களும் திட்டம் வகுப்பது, முயற்சி, உழைப்பு மற்றும் துஆவில் நிலைத்திருங்கள். அல்லாஹ் அருள்புரிவானாக. ஏனென்றால் அவனது அருள் இல்லாமல் எதுவும் முடியாத காரியமாகும். அவனது அருள் வரும் போது எல்லா வழிகளும் திறந்து விடுகின்றன.

ஒரு வகையில் அன்னாரின் துஆவின் விளைவினை அல்லாஹ் முழுமையாக்கியதை அன்னாரது சஹாபாக்களிடமும் காணலாம். அதேபோன்று இப்போதும் அல்லாஹ் முழுமை ஆக்குகின்றான். ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் ஒரு வகையில் பக்குவத்தை அடைந்து விட்டது. ஆனால் காலம் செல்லச் செல்ல ஒரு சில தீமைகளும் நிலை கொள்கின்றன. உதாரணமாக முன்பே கூறியது போன்று தற்பெருமை போன்றவை சில இடங்களில் அதிகமாகவே தென்படுகின்றன. ஒருவர் மற்றவருக்கு எதிராக வழக்கு தொடருதல், சண்டை சச்சரவுகள் அதிகமாக வளர்ந்து கொண்டு செல்கிறது. இதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியமுள்ளது. எனவே நாம் உண்மையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தை சார்ந்திருக்க உரிமையுள்ளவர்கள் என்று கூற வேண்டுமானால் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் நாம் நமது நிலைமையின் பக்கம் கவனம் வைக்க வேண்டும். தகுந்த நேரத்தில் வெளிப்படாத அறிவு நமக்கு எந்த பலனையும் தராது. உதாரணமாக, நீங்கள் பிறருக்கு தப்லீக் செய்கிறீர்கள்; பிறருக்கு அறிவுரைகள் கூறுகின்றீர்கள். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று சந்தர்ப்ப சூழ்நிலைகளின்போது நம்மிடத்திலிருந்து நல்லொழுக்கம் வெளிப்படாவிட்டால், நமது நிலையில் நல்ல மாற்றம் வெளிப்படா

விட்டால் நமது அறிவு பயனளிக்காது. நம் மீதும் வெளிப்படக்கூடியதாக இருக்கும் அறிவுதான் தகுந்த அறிவாக இருக்க முடியும். ஒருவருக்கொருவர் உள்ள தொடர்புகள் நமது அகத்தையும் புறத்தையும் ஒன்றாக காட்டாத வரை நமது அறிவு பயனற்றதாகும். இன்றைய காலத்தில் ஜமாஅத்தின் எதிர்ப்பும் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. நாம் எல்லா ரீதியிலும் நமது சுயவிருப்பங்களையும் தற்பெருமை மற்றும் நான் என்ற அகங்காரத்தை நாம் முதுகிற்குப் பின்னால் போட்டு விட்டு சமமாக இருத்தலின் ஓர் உன்னதமான உதாரணத்தை வெளிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அல்லாஹ் இந்த ஜமாஅத்தை சஹாபாக்களின் முன்மாதிரியின்படி செலுத்த நாடுகின்றான். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

கடந்த ஜுமுஆவில் இரண்டாவது குத்பாவின் போது எனக்கு நீண்ட நேரம் இருமல் இருந்ததனால் சிலருக்கு துக்கம் ஏற்பட்டவாறு பல கடிதங்கள், ஃபேக்ஸ்கள் பல நாடுகளிலிருந்தும் பல இடங்களிலிருந்தும் வந்துள்ளன. மேலும் அத்துடன் மருத்துவ சிகிச்சையும் பல எண்ணிக்கையில் வந்துள்ளது. அதையெல்லாம் நான் உபயோகிக்கத் தொடங்கினால் மேலும் உடல்நிலை சரியில்லாமல் ஆகிவிடக்கூடும். எவ்வாறிருந்த போதிலும் மக்கள் தத்தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்கூலியினை வழங்குவானாக. மேலும் இவ்வாறான நோய் அது குணமாவதற்கான நேரத்தை எடுக்கத்தான் செய்யும். நான் சுயமாக ஹோமியோபதி சிகிச்சை எடுத்து வருகிறேன். பிறகு மருத்துவரிடமும் சில நேரம் காட்டி வருகிறேன். அல்லாஹ் அருள்புரிவானாக. துஆவில் நினைவில் கொள்ளுங்கள்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 28.10.2011**

Translated by : Maulavi R. AHMAD ABDULLAH

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456